ஹர ஹர சங்கர ! ஜய ஜய சங்கர !

# சங்கர துதி மலர்

(எளிய தமிழில்)



வெளியீடு

கவிஞர் சானு புத்திரன்




## ஜய இந்திர குரு துதி

எல்லாம் சிவமென்று இருந்தவோர் பரசிவம்
வல்லான் வலிமையை உணர்த்துமோர் துறவறம்
நல்லோன் வழிவந்த நற்றுணை தருந்தவம்
இல்லோன் எனவிருந்தே எம்மையும் காத்திடும்!
ஏகா, ஏகம்பா, ஏற்றதோர் திருக்கம்பா!
நோகா வாழ்வருள் நாயகா குருபரா!
வாகா யுருவிலே நின்றவா சுந்தரா!
வாவா வந்தருள் புரிவையே சங்கரா!
இருள்நீக்கித் தந்ததோர் ஈடிலாச் செல்வமே!
இருள்நீங்க வாரமருள் தருமமே! தெய்வமே!
கடுவினை களைந்தருள் பதுமனே! பரமனே!
செகத்குரு ஜயஇந்திர ஸரஸ்வதி போற்றி! போற்றி!

குருவுண்டு - பயமில்லை; குறையேதும் இனையில்லை!

நமஸ்காரங்களுடன்,

பெரியவா கடாக்ஷம் பரிபூரணம்!

சாணு புத்திரன்.

மார்ச் 2020

# || சங்கர துதி மலர் ||

கலியுகத்திலே சிறப்புற வாழ்ந்து விளங்கிட வேண்டுமாயின் குருபக்தி மிக அவசியம் என்பர் ஆன்றோர். அப்படியாக, தமிழ் மொழியிலே நம் குருவை, ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாத பரம்பராகத மூலாம்னாய ஸர்வக்ஞ பீடம் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாசார்யர்களை அனுதினமும் போற்றி வணங்குதற்கென அவரருளால் அடியேனால் எழுதப்பெற்ற சங்கர துதி மலர் எனும் இந்தத் தொகுப்பினை, நம் ஆசார்யர்கள் பூஜ்யஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீஸ்ரீஸ்ரீ சங்கர விஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் பரிபூரண அனுக்ரஹத்தை மனதார ப்ரார்த்தித்துக் கொண்டு சமர்ப்பிக்கின்றேன். குருவடி பணிவோம்! குறையின்றி வாழ்வோம்!

**குருவுண்டு - பயமில்லை; குறையேதும் இனியில்லை!**

நமஸ்காரங்களுடன்,

சாணு புத்திரன்.
+91 99401 99430

பெரியவா கடாக்ஷம் பரிபூரணம்!

## கணநாதன் துதி

தாய்தந்தை உலகமென்ற தத்துவத்தை தந்தோனே!
சக்திசிவன் தவபுதல்வன் ஆறுமுகன் சோதரனே!
பழகுதமிழ் சொல்லெடுத்து குருநாதன் கழல்பணிய
அமுதமொழி தந்தெமக்கு அருள்வாயே கணநாதா!

## சங்கர துதி

துதித்தேன் கழுவினை இரண்டும் களைந்தே குலமோங்கத்
தொழுதேன் கழலடி நிழல்தரு கனியருள் பெறவேண்டிப்
பதித்தேன் பரமுனித் திருவுரு தரிசனம் அகமுள்ளே
நறுந்தேன் அருட்செகத் குருவுன தருள்புரி சங்கரனே!

## சங்கர குருவருட்பா

ஏக நாயகனை இனியனைஎன் உள்ளத்தே
புகுந்தபொன் னாரமாயொளிர் வோனை
போத நாயகனை புல்லர்க்கு மருள்வோனை
பூரணமா மகுடந்தரி நல்லொளியை
மேக வரமா யணையுநற் றோளிர்வோனை
மண்ணிலுஞ் செழுங்கற் றோனை
யோக மாயுற்றசீர் காமகோடி சங்கரனை
உண்டென யுணர்ந்தோர் மகிழ்வரே!

*திருத்தண்ட-கமண்டலம் துணை!* *திருத்தண்டக-மண்டலம் துணை!*

# ஸ்ரீமஹாபெரியவா போற்றித் துதி

பேர்பூத்த புண்ணியனே நற்புகலே போற்றி!

பிறைபூத்த வேணியனின் திருவுருவே போற்றி!

ஏர்பூத்த கணநாதற் கிளையவனே போற்றி!

எண்ணரிய புவியோரின் இறையோனே போற்றி!

பார்பூத்த கலைஞான குருபரனே போற்றி!

பத்திரச முத்திரசச் சுவையமுதே போற்றி!

சீர்பூத்த கச்சிநகர் கோமளமே போற்றி!

சிவபுரத்து காமகோடி கற்பகமே போற்றி!

உத்தமர்தம் மனத்துறையும் மா'தவனே போற்றி!

ஒப்பரிய மறைநாதத் தூயுருவே போற்றி!
முத்தமிழை எமக்களித்த முதல்வோனே போற்றி!
மூவருமே ஓருருவாய் வாய்த்தோனே போற்றி!
முத்திநெறி யறிவிக்கும் செகத்குருவே போற்றி!
சித்திபெற பத்திவழிச் செப்பியவா போற்றி!
மதிநிறைய மங்களங்கள் செரிவோனே போற்றி!
மயன்மாலும் போற்றுகின்ற சிவவுருவே போற்றி!
சுந்தரமாய் பவனிவரும் சங்கரியே போற்றி!
தோகைமயில் வாகனனின் தெள்ளமுதே போற்றி!
அந்தணர்க்கு அருள்புரிந்த அருமறையே போற்றி!
அகந்தனிலே உண்மைநெறி உணர்த்தியவா போற்றி!

மந்திரநான் மறைபோற்றும் மன்னவனே போற்றி!
மருவுமடி யவர்கண்ணணின் தவமணியே போற்றி!
சீர்காக்க கலவைபூத்த கண்ணணியமே போற்றி!
சிவபுரத்து சிவைநாடி செகத்குருவே போற்றி!
பருவதத்து மலைமகளின் அருளொளியே போற்றி!
பார்ப்பவரின் மனங்கவரும் மதியொளியே போற்றி!
இருவினையின் மயல்நீக்கும் அருமருந்தே போற்றி!
ஏகம்பன் தலம்மேவும் முனிக்கோவே போற்றி!
பெருவினையின் தொடரறுக்கும் பெரியோனே போற்றி!
பிரம்மத்தை உணர்த்தியெமைத் தூய்ப்போனே போற்றி!
பொல்லாத வினைதீர்க்கும் பொற்பதமே போற்றி!

பொலிவுதரும் செவ்வருளை தருநிழலே போற்றி!
இங்கிதமாய் எமக்கருளும் பேரிறைவா போற்றி!
மந்திரவேற் கரம்கொண்ட மாமதியே போற்றி!
மாவடியிற் வைகுமெழி மதிமயிலே போற்றி!
மாமாயன் முகிழ்தவமே முன்னொளியே போற்றி!
அகிலமிதன் நோயகற்றும் மாமருந்தே போற்றி!
அமுதீசன் தருவரமே தயைபுரிவாய் போற்றி!
சுகிர்தகுண சாலிஅனு கூலியுரு போற்றி!
சுந்தரமாய் வந்துதித்த சங்கரனே போற்றி!
நாவலிலே சுட்டகனி நயந்தவனே போற்றி!
நாமமது தருபலனால் காப்பவனே போற்றி!

நந்திக்கொடி கொண்டவனின் நயனருளே போற்றி!
முந்தைவினை வேறறுக்கும் முனிபதமே போற்றி!
தங்குகுருப் புகழ்கேட்ட தன்னருளே போற்றி!
பொங்குதுறைப் பூவெழிலோய் புகல்நிழலே போற்றி!
புவியிதனை சீரணைக்க தவம்புரிவோய் போற்றி!
தவபுரத்து தன்னொளியே திரைகுருவே போற்றி!
ஓங்குமலர் சங்கரத்தின் முன்னொளியே போற்றி!
உண்மைநெறி உவந்தளித்த உத்தமனே போற்றி!
மங்கையவள் ஆண்டருளும் தலமுறைவே போற்றி!
வேங்கைமர நிழலமரும் வேதியனே போற்றி!
மெய்ஞானப் பொருளுணர்த்தும் நல்முனியே போற்றி!

மெய்சிலிர்க்க வரமருளும் சுபவரதா போற்றி!
வல்வினையைக் கலைந்தருளும் கதிரோனே போற்றி!
வளம்பயக்கும் காமகோடி சங்கரனே போற்றி!
ஊனேறும் எம்முயிரின் உயிர்துடிப்பே போற்றி!
ஓங்கார நிலைகாட்டும் துறவுருவே போற்றி!
மல்லபுரக் கச்சிமடக் குருபரனே போற்றி!
வல்லகுரு பாலாற்றங் கரையமுதே போற்றி!
குறைபொறுத்து நிறைவளிக்கும் குருமணியே போற்றி!
மறைநான்கும் விளங்குவழித் யுணர்த்தியவா போற்றி !
வந்தனைக்கு பயனளிக்கும் வல்லோனே போற்றி!
வரமளித்து வாழ்விலெமைக் காப்போனே போற்றி!

நம்புமடி யார்க்கருளும் குலக்காவல் போற்றி!
ஞானமதைத் தந்தருளும் சிவநேயா போற்றி!
பைம்புலத்தில் சிலையருளும் சிவசுதனே போற்றி!
பரிந்தளித்த பவளவிழைத் திருப்பேறே போற்றி!
மருவுசீவ நெறிவகுத்த மா'தவனே போற்றி!
குருவுருவாய் காக்கவந்த குலபதியே போற்றி!
வேண்டுவோர்க்கு வரமளிக்கும் கலியிறையே போற்றி!
வேண்டாதோர் பேதமிலா வரவடிவே போற்றி!
தவம்பூத்த பரமசுகக் கனியமுதே போற்றி!
தனம்பூத்த மனமுதவும் தளிரோனே போற்றி!
அவம்பூத்த மருணீக்கும் அம்பிகையே போற்றி!

அடியவனுக் கருள்புரியும் திருவணங்கே போற்றி!
பவம்பூத்த விதியழிக்க வல்லவனே போற்றி!
பதம்பூத்த பணிபரவப் பணிப்போனே போற்றி!
பத்திநெறி தழைத்தொளிரச் செய்தோனே போற்றி!
மெச்சியெமக் கருள்புரியும் செகத்குருவே போற்றி!
ஆநிறையின் பெருமைதனை அறிவித்தோய் போற்றி!
ஆகமங்கள் செழித்திடவே அருள்குருவே போற்றி!
ஆதியந்தம் ஏதுமிலாச் சோதியனே போற்றி!
ஆதிவழித் தோன்றியநல் குருவடியே போற்றி!
ஆகுவழி தாமுரைத்து அருள்புரிவோய் போற்றி!
ஆகுசுகம் விளங்கிடவே வழியுரைப்போய் போற்றி!

ஆநிறையைக் காக்கஉரை நல்கியவா போற்றி!
ஆதிவழி வந்தகுரு சங்கரனே போற்றி!
சரணமென அண்டிவந்தோர் துயர்களைவோய் போற்றி!
சங்கடங்கள் தீர்த்தளித்து வரமருள்வோய் போற்றி!
அருணபதத் தருள்பெறவே வரமருள்வோய் போற்றி!
அங்கண்ணென அவனியர்க்கு மருள்புரிவோய் போற்றி!
தென்னகத்துக் கயிலாயத் துறையிறையே போற்றி!
மண்ணுலகச் செகத்குருவே மேல்மதியே போற்றி!
வான்முகிலாய் வளங்கொழிக்க வந்தருளே போற்றி!
மேன்மைதரு காமகோடி செகத்குருவே போற்றி!
பரமகழல் பணிவோர்தம் பேரிறையே போற்றி!

பங்கமிலாப் பந்தமென பதியமர்ந்தோய் போற்றி!
முப்போதும் சிவபூசை செய்குருவே போற்றி!
முண்டிவரும் பவவினையை களைவோனே போற்றி! 100
மாசறுநல் மதிசூடும் இறையுருவே போற்றி!
மாலவனின் மங்களச்சீர் மொழிவோனே போற்றி!
மாமயனின் தன்மைமிகு சீர்குருவே போற்றி!
மாதவளாம் உமையாளின் பூங்கழலே போற்றி!
அமுதத்தோ டன்றுவந்த திருமகளே போற்றி!
அம்பிகையாள் அருளுடைத்த அருங்குருவே போற்றி!
சீர்பூத்த கச்சிநகர் கோமளமே போற்றி!
சிவபுரத்து காமகோடி கற்பகமே போற்றி! 108

## துதிபலன்

ஆகும் வரங்கள் அனைத்தும் தரும்நல் அருளினுயர்
ஞானந் தரும்கலை யாவுந் தரும்வான் புகழுதவுந்
தேகந் தரும்சிவ நேயந் தரும்பொன் திகழ்கச்சி
ஏகும் மடத்தினில் வாழ்சங் கரனார் மலரடியே!

## ஓரந்தாதி

நலந்தரும் வளம் தரும் என்னாளும் நெறிவழுவா
மனந்தரும் தெய்வ அருளுந்தரும் நஞ்சுமில்லா
குணந்தரும் வல்லன எல்லாம் தரும் அடியரனைவருக்கும்
மணந்தரும் செஞ்சடையோன் சசிசேகரன் திருப்பாதமே!

# ஸ்ரீகாஞ்சி காமகோடி பீட பஞ்சபுராண துதி

ப்ரத்யக்ஷ பரமேஸ்வரன் தானே நம் பெரியவா! சர்வேஸ்வரனான சிவபரமேசனுக்கு பூசைகள் முடித்த பின்னராக, பஞ்சபுராணம் பாடி போற்றுவது போலே, நம் சங்கர குருவையும் பஞ்சபுராணம் பாடிப் போற்றுவது தானே சிறப்பும் கூட!

## குரு துதி

ஓதாப் பெருநெறியே ஓதுதற்கு அரியவனே
சாகாப் பெருநெறியச் சந்ததமும் யான்பெறவே
வேதப் பொருளாய் வித்தகஞ்செய் காவலனே
நாதப் பெருவொளியே நயந்தருள்வாய் சங்கரனே!

# கச்சியம்பல துதி

வேகவதி வளங்காட்டும் தொண்டைவள நாடெனவும்
ஆகமங்கள் சீருடைக்கும் சொக்கன்மால் தலமெனவும்
மேகவயல் பூச்சொரியும் கதம்பவனத் தெழில்காட்டும்
ஏகம்பன் முதலான சிவமாலிறை மேவுபுகழ்
நகரத்துள் சிர்பெருமைச் சிறப்பெனவே போற்றலுடை
நிகரில்லா தலமோடி இறைபணிந்து தொழுதேற்று
பகருரையாம் தருமநெறி வழுவாமல் வாழ்ந்திங்கு
அகமகிழ திருக்காஞ்சித் தலம்போற்றி வாழுவமே!

*திருக்கச்சியம்பலம் போற்றி! போற்றி!!*

# காஞ்சி காமகோடி பீட துதி

மலர்மகள் அருவமாகி எழிலுருவத் திறமேற்ற,
அலர்மகள் நாணுதலாய் நயமேற்றத் தலமேவும்
மலைமகள் மூவரென்ப திருவுருவுங் கொண்டாளும்
சிலையருட் திருக்காம கோட்டத்தி னருள்கூட்டும்
மறைமிகு சீர்காஞ்சி காமகோடி பீடத்தின்
நிறையருட் சீலர்குரு வருள்பெற்று நலமோடே
கலைமிக வுங்குக்கூட்டிச் செல்வசிறப் போடுமிங்கு
நிலைப்புகு வாழ்வதனை சத்தியமாய் பெறுவோமே!

## தண்டகமண்டல துதி

மதிக்குத் துணைதிருத் தண்டவருட் பெருங்கருணை, நிறையகலா
திருக்கத் துணைகுரு பரனுன்திரு நாமங்கள், முன்வினையின்
விதிக்குத் துணையுந்தன் செந்திரு குருவுருவம், நினைந்தபடி
இருக்கத் துணைதிருத் தண்ட கமண்டலமுந் துறவுருவுமே!

## காஞ்சீ சங்கர துதி

சீர்கொண்டத் தெய்வீகத் திருமுகமும், திருக்கரத்தில்
மெய்கொண்டத் திருத் தண்டமும், மேனியில்
உருகொண்ட சத்சிவமும், கனமாலையும், துளசியும்,
மெய்கொண்டத் திருச்சாந்தும், சந்தனமும் தான்கொண்ட
எம்பெருமான் ஆச்சார்யன் திருவடிகள் போற்றி! போற்றி!!

# அடியவர் வாழ்த்து

நல்வினைக் கெவ்வினையு மீடில்லை யெனஉணர
உய்வினை நாடாமல் உவப்பதுவு மெப்போதோ
தூய்வினைத் தேடிநல முய்யலென நெறிபுகட்டி
மூவினை யோட்டியரு ளாசியினை வரமளித்து
மெய்வினை புரிந்தூட்டி அறிவூட்டும் குருபரர்க்கு
கைவினை புரிவாரே மெய்ப்பொருளு முணர்வாரே!
அவ்வினை செய்அடியர் கழல்போற்றி தொழுதுமினி
செய்வினை யாவும்நலம் ஓங்கிடவே வாழ்த்துதுமே!

குருவடி தொழுமடியார் கழல் போற்றி! போற்றி!!

# செகத்குரு வந்தனம்

போற்றியுன் பதமலர் புண்ணிய வடிவே
புவனநா யகனெனப் போற்றினம் யாமே
மாற்றிடும் விதிதனை மதிதந்தருள் வாயே
மங்கல சங்கரத் தேவெனுந் தாயே
தேற்றிடு வாரிலைத் தபோமயத் திருவே
தெவிட்டாத் தெள்ளமுதத் தேனெனுந் தேவே
ஆற்றிடு மடியரெ மகத்திருள் போக்குவாய்
மா'தவ மாமுனியே செகத்குருவே போற்றி! போற்றி!!

பெரியவா சரணம்! பெரியவா சரணம்! ஸ்ரீமஹாபெரியவா அபயம்!




# ஸ்ரீ சங்கர துதி

ஆரமுதே, அருட்கடலே, என்னை யாளு
மகிலாண்ட நாயகமே, அறமே, மூலப்
பாரதியே, பரத்தோர்கண் பாரமதை நீக்கு
மாமருந்தே, மறை போற்றும் மா'தவமே,
சீரருளே, சிவபுரத்துச் சிவபரமே, சிவசக்திக்
கோமளமே, தண்டலத் தேயுதித்த வேதியமே,
செழுமதியே, யுனைவிடுத்துப் பிறிதோர் தெய்வம்
எமக்கிலையே சங்கர விசயேந்திர பெருமானே!

பதம்: பரத்தோர்கண் பாரம் - புவி மாந்தர்களுக்குள்ள துயர்கள்;
சிவபுரம் - சிவகாஞ்சி; தண்டலம் - ஸ்ரீபெரியவாளின் பிறந்த ஊர்,

குருவுண்டு - பயமில்லை; குறையேதும் இனையில்லை!

பெரியவா கடாக்ஷம் பரிபூரணம்!

நமஸ்காரங்களுடன்,
சாணு புத்திரன்.

|| பெரியவா சரணம் ||

மாதா பிதாகொண்டே பிறப்பிதனைப் பெற்றிடினும்
நோகா நிலைகொள்ள ஆசார்யர் அருள்பெற்றே
வாடா மலரினைபோல் வாழ்விதனில் இன்பயக்க
நாடா திருப்போமோ சங்கரர்தம் திருப்பாதம்!

ஆம். இல்லற வாழ்விலே நமக்கு இருக்கும்படியான எவ்வித துன்பங்களும் நீங்கி இன்பம் ஏற்படவேண்டுமாயின், குருபக்தி அவசியம் தாம். ஒவ்வொரு நாளும் பெற்ற தாய்-தந்தையரை வணங்கி, பின்னர் குருவை நமஸ்கரித்து, தெய்வ அனுக்ரஹத்தை வேண்டி துதிபாடி தொழுதல் வேண்டும் என்பதே நம் ஆன்றோர் வாக்கு! இறைவனைத் துதிக்கும்போதெல்லாம் எல்லோருக்காகவுமாக துதித்தல் வேண்டும் என்பது நம் குருநாதரின் வாக்கு! ஜகத்குருவைத் துதிக்கையிலே ஜகத்திற்காக துதிப்பதே சிறப்பு! எல்லோரும் ஓர் குலம் என்பதாக வாழ்வோம்!

அவ்வகையிலே சிறியேன் அடியேனின் மனந்தனில் வந்துதிக்கும் ஒவ்வொரு எண்ணத்துகள்களுமே அனுதினமும் எழுத்து வடிவத்திலே சமூக வலை-தளங்களிலே பகிரப்பட்டும் வருகிறது. அவ்வகையிலே இந்தத் தொகுப்பு உருவாகியதும் எம் ஆசார்ய தெய்வத்தின் அனுக்ரஹத்தினால் மட்டுமேயன்றோ! சிந்திப்போம்! செயல்படுவோம்! வாழ்வோம்! வாழ்விப்போம்!

சர்வம் ஸ்ரீசந்த்ரசேகரம்! சத்யம்... சத்யம்... சங்கர சாந்நித்யம்!

குருவுண்டு - பயமில்லை; குறையேதும் இனியில்லை,

பெரியவா கடாக்ஷம் பரிபூர்ணம்!

கவிஞர் சானு புத்திரன்

